**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 139 - 2022**

**வா.சா.1 – செல்வக்குமார் 23.10.2025**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

வா.சா.ஆ.1 ஆவணம் எப்போது பெறப்பட்டது என்றால் 1960ல் பெற்றுள்ளார்கள். வா.சா.ஆ.1 ஆவணம் 1960ல் பெறப்பட்டது என்பது வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள 1வது அட்டவணை சொத்து 1ம் பிரதிவாதியின் தாயார் சப்பாணிமுத்தம்மாள் மற்றும் அவரது சகோதரி காத்தாயி ஆகியோருக்கு பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்னென்ன சொத்துக்கள் அவருக்கு பாத்தியப்பட்டது என்பது தெளிவாக இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் மட்டும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 தீர்ப்பாணையின் படி எனது தகப்பனாரும் 1ம் பிரதிவாதியின் தாயார் சப்பாணிமுத்தம்மாள் மற்றும் சகோதரி காத்தாயி ஆகியோர் சொத்துக்களை
சுவாதீனம் எடுத்துக் கொண்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் சுவாதீனம் எடுத்துக்கொண்டார்கள். 1960ல் சுவாதீனம் எடுத்துக்கொண்டதாக எனது அப்பா சொல்லி எனக்கு தெரியும் நேரடியாக எனக்கு தெரியாது நான் 1978ல் பிறந்தேன். வா.சா.ஆ.1ன் படி அவரவர் சொத்துக்களை தனித்தனியாக சுவாதீனம் எடுத்து அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஒரு சில சொத்துக்களை 1ம் பிரதிவாதியின் தாயாரும் என் தகப்பனாரும் எனது அப்பத்தாவும் மாறி மாறி அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 தீர்ப்பாணையின் படி தான் நான் இந்த வழக்கில் பரிகாரம் கோரியுள்ளேன்

என்றால் சரிதான். வா.சா.ஆ.1 தீர்ப்பாணையின்படி எந்தெந்த சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தாயார் சப்பாணிமுத்தம்மாளுக்கும் அவரது சகோதரி காத்தாயிக்கும் கிடைக்கப்பெற்றது என்று என்னால் சொல்ல முடியாது. சர்வேஎண் 27/1 வா.சா.ஆ.1 தீர்ப்பாணையில் எனது தந்தையின் பாகத்திற்கு ஒதுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண் 27/1 74 செண்டு நஞ்சை நிலம் 1ம் பிரதிவாதியின் தாயார் சப்பாணிமுத்தம்மாளுக்கு வா.சா.ஆ.1ன் படி கிடைத்தது என்றால் சரியல்ல. சர்வே எண் 27/1 க்கு தற்போது எனது அப்பா பெயரில் பட்டா எண் 142 உள்ளது என்றால் சரிதான். <u>என்னிடம் காட்டப்படுவது எனது அப்பா பெயரிலுள்ள கணினி பட்டா என்றால் சரிதான் அது பி.வா.சா.ஆ.2</u> மேற்படி பட்டா யு.டி.ஆர் காலத்திலிருந்து எனது அப்பா பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண் 47/7பி 51 செண்டு நஞ்சை காத்தாயிஅம்மாள் மற்றும் சப்பாணிமுத்தம்மாள் ஆகியோருக்கு பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண் 47/7பி யு.டி.ஆர் காலத்திலேயே எனது அப்பா சப்பாணியாபிள்ளை அனுபவித்து வந்து அவர் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். <u>என்னிடம் காட்டப்படுவது எனது அப்பா பெயரிலுள்ள கணினி பட்டா என்றால் சரிதான் அது பி.வா.சா.ஆ.3</u> வா.சா.ஆ.1 தீர்ப்பாணையில் கண்ட சொத்துக்களை மாறி மாறி அனுபவம் செய்து வந்து பட்டா ஏற்பட்டதாக வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பொதுவாக யார் பெயரில் பட்டா உள்ளதோ அவரது பெயரில் தான் வரி விதிப்பு ஏற்படும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 வரி ரசீது பட்டா எண் 289 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டா எண் 289 இன்று வரை 1ம் பிரதிவாதியின் தாயார் சப்பாணிமுத்தம்மாள் பெயரில்

உள்ளது என்றால் சரிதான். சப்பாணியாபிள்ளையின் அப்பா பெயர் சலுகையா பிள்ளை என்ற சப்பாணியாபிள்ளை. சலுகையாபிள்ளையின் அப்பா பெயர் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 வரி ரசீதில் ச.சப்பாணியாபிள்ளை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ச.சப்பாணியாபிள்ளை 1ம் பிரதிவாதியின் தாத்தா என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் அம்மாவை பெற்ற அப்பாவின் பெயர் சலுகையாபிள்ளை என்ற சப்பாணியாபிள்ளை. மேற்படி சலுகையாபிள்ளை என்ற சப்பாணியாபிள்ளை பெயரில் தான் வா.சா.ஆ.2 வரி ரசீது போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 கணினி பட்டா 1ம் பிரதிவாதியின் தாயார் சப்பாணிமுத்தம்மாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 கணினி பட்டாவுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றுசீட்டு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 12.01.1960ல் ஏற்பட்டதாக சொல்லக்கூடிய சமாதான தீர்ப்பின் அடிப்படையில் தாவா சொத்தின் சுவாதீனத்தை எனது தகப்பனாரோ, நானோ அடையவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சுவாதீனமும் அனுபவமும் இன்று வரை 1ம் பிரதிவாதியின் வசம் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. சமாதான தீப்பாணையின் படி பாத்தியமானதாக சொல்லப்படும் ஒரு சில சொத்துக்களை எனது தந்தை சுவாதீனத்தில் எடுத்து எனது தந்தை பெயரில் பட்டா ஏற்பட்டு இன்றுவரை அனுபவித்து வருகிறோம் என்றால் நீதிமன்றம் மூலமாக கிடைத்த சொத்துக்களை மட்டும் தான் நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம். நீதிமன்றம் எந்த சொத்துக்களை ஒதுக்கியது என்றால் வா.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை ஒதுக்கியது. வா.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ள

அனைத்து சொத்துக்களையும் நான் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பிராதில் வா.சா.ஆ.1 மூலம் எத்தனை இலக்க சொத்துக்கள் கிடைத்தது என்று தெளிவாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பாகப்பிரிவினை வழக்கில் ஏற்பட்ட சமரச தீர்ப்பாணையின்படி உரிமை கோரவேண்டும் என்றால் 12 ஆண்டுகளுக்குள் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. 60 ஆண்டுகள் கழித்து தாவா சொத்தை பொறுத்த மட்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக, உண்மையான சொத்து விபரங்களை மறைத்து தாவா சொத்தை மட்டும் பிரதிவாதிகளிடம் இருந்து அபகரிக்க வேண்டும் என்று காலம்கடந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சமரச தீர்ப்பாணையில் கண்ட தரப்பினர்களின் வாரிசுகள் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான் அவர்கள் எந்த இடைஞ்சலும் செய்யவில்லை. தாவா சொத்தின் சுவாதீனமும் அனுபவமும் 1, 2 பிரதிவாதிகள் வசம் உள்ளதால் தான் அவர்களை மட்டும் இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. தரப்பினர்களாக சேர்த்திருந்தால் அவர்கள் சொத்து யாருக்கு பாத்தியம் என்று சொல்வார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர்கள் உண்மையான விபரத்தை நீதிமன்றத்தில் கூறிவிடுவார்கள் என்பதால் தான் அவர்களை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மை சங்கதிகளை மறைத்து தாவா சொத்தை பொறுத்து மட்டும் இந்த

வழக்கை தாக்கல் செய்துள்ளதால் நான் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை